Nallur Branch Library
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

ஏடு 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஐப்பசி 26 திங்கட்கிழமை (11-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 268

★ ஆயுதங்களைக் கைவிட வேண்டும்

★ கால அட்டவணைக்கு இணங்க வேண்டும்

# புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா நிபந்தனை!

## மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தையும் ஏற்கத் தயார் என்று அறிவிப்பு

கொழும்பு, நவம்பர் 11

★ விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும்.

★ ஒரு கால அட்டவணைக்குள் சமாதானப் பேச்சுக்களை பூர்த்தி செய்வதற்கு அவர்கள் இணங்க வேண்டும்.

— இந்த இரண்டு நிபந்தனைகளையும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ஏற்றுக்கொண்டால் அந்த இயக்கத்துடன் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்திருக்கின்றார்.

பேச்சுவார்த்தைகளை சுமுகமாக நடத்துவதற்கு மூன்றாவது தரப்பு ஒன்றின் உதவி அவசியம் எனக் காணப்பட்டால் அதற்கும் அரசாங்கம் சம்மதிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தான் ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு ஆண்டுகள் பூர்த்தியாவதை ஒட்டி, அரசு சார்பு 'லேக் ஹவுஸ்' பத்திரிகை நிறுவனத்துக்கு அளித்த விசேட பேட்டி ஒன்றிலேயே மேற்படி விடயங்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கின்றார்.

அப்பேட்டியில் ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு அமைதி ஏற்படுவதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதைக் காட்டிலும் அரசின் அமைதித் திட்டங்களை இலங்கைத் தமிழர்கள் ஏற்பது தான் அதிமுக்கியமானதாகும்.

விடுதலைப் புலிகளுடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு முகாமுக்குள் இருந்து புலிகளுக்கு உதவி கிடைத்ததா?

### இராணுவ நீதிமன்ற விசாரணையில் திருப்பம்

கொழும்பு. நவ. 11

முல்லைத்தீவு படைத்தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியுறுவதற்கு அந்தத் தளத்தில் பணிபுரிந்த படைவீரர் ஒருவரின் உதவி விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்ததா?

முல்லைத்தீவு முகாமிலிருந்து தப்பிப் பிழைத்த படையினர், இத்தகைய உதவி புலிகளுக்குக் கிடைத்திருப்பதாகத் தாங்கள் நம்புகின்றனர் என்று தெரிவித்துள்ளனர்.

கொழும்பு செய்தி வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றன.

முல்லைத்தீவுத் தளம் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான சமயம், தளத்தில் பொருத்தப்பட்டிருந்த 122 எம். எம்., 120 எம் எம், 81 எம். எம். ஆட்லறிகள் எதிரிக்கு எதிராக சரிவர பயன்படுத்தப்படவில்லை என்றும், இலக்கு வைக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு முகாம் வீழ்ச்சி குறித்து விசாரணை நடத்தும் இராணுவ உயர்மட்ட விசாரணையாளர்களிடம் —

முகாமுக்குள் இருந்த படைவீரர் ஒருவரின் ஒத்துழைப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வாராந்தம் 900 பயணிகள் சென்று வருவதற்கு வசதி!

### கப்பல், விமானங்கள் மூலமாக

யாழ்ப்பாணம், நவ. 11

வாராந்தம் யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 900 பயணிகள் திருகோணமலை மற்றும் கொழும்புக்கு சென்றுவர ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இராணுவ உயர் வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

இதன்படி —

தினசரி பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் இரண்டு பயணிகள் விமானத்தை சேவையில் ஈடுபடுத்த முயற்சிக்கப்பட்டுள்ளது.

இரண்டு விமானங்கள் பயணிகள் சேவையில் ஈடுபட்டால் தினசரி 92 பேர் என்ற அடிப்படையில் வாரத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

சிலாபம் இரணவிலவில் உள்ள

## 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலையத்தில் தீ!

### பல உபகரணங்கள் நாசம்

கொழும்பு, நவ. 11

சிலாபம் இரணவில பகுதியில் அமைந்துள்ள 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலையத்தில் இடம்பெற்ற தீ விபத்தினால் ஒலிபரப்புக் கருவிகள் பல சேதமடைந்ததாக இலங்கை வானொலி அறிவித்தது.

அங்குவிரைந்த தீயணைப்புப் படையினர் ஒரு மணித்தியாலத்துக்குள் தீயைக் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர் என்றும் —

எவருக்கும் காயம் ஏற்படவில்லை என அமெரிக்கத் தகவல் நிலையம் தெரிவித்தது என்றும் —

இலங்கை வானொலி மேலும் குறிப்பிட்டது.

இத்தீவிபத்துக்கான காரணம் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவரவில்லை. (உ-3)

## பாரிஸ் கொலைகள் குறித்து புலிகள் தலைவர் அறிக்கை

பாரிஸ், நவ. 11

கடந்த மாதம் 26 ஆம் திகதி பாரிஸில் சுட்டுக் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதிப் பொறுப்பாளர் கே. பேரின்பநாதன், 'பாரிஸ் ஈழமுரசு' ஆசிரியர் கே. கஜேந்திரன் ஆகியோரின் பூதவுடல்கள் நாளை பாரிஸில் நல்லடக்கம் செய்யப்படவிருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் செய்திக் குறிப்பு ஒன்று இத்தகவலை தெரிவித்தது.

இது தொடர்பாக விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் 30 பேர் சந்தேகத்தில் கைது

கொழும்பு, நவ. 11

வன்னியின் ஏனைய பகுதிகளில் இருந்து வவுனியாவுக்குள் ஊடுருவிய விடுதலைப் புலிகள் சந்தேக நபர்கள் 30 பேர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை வானொலி அறிவித்தது.

கடந்த 22 ஆம் திகதி முதல் வவுனியாவுக்குள் தினமும் சுமார் ஆயிரத்து 500 பேர் வரை வந்ததாகவும் —

கடந்த வெள்ளிக்கிழமை 150 பேர் மட்டுமே வவுனியாவுக்குள் வந்ததாகவும் —

அதிகாரிகள் தெரிவித்தனர்.

அங்குள்ள அகதிகளின் வசதிக்காக மேலும் ஒரு முகாம் அமைக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## யாழ். பல்கலைக்கு ஒன்றரைக் கோடி ரூபா!

யாழ்ப்பாணம், நவ, 11

யாழ். பல்கலைக்கழகத்திற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பொருள்களை கொள்வனவு செய்ய மேலும் ஒன்றரைக் கோடி ரூபாவை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு ஒதுக்கி உள்ளது.

யாழ். பல்கலைக்கழக செயற்பாட்டிற்கு உபகரணங்கள், ஜெனரேட்டர்கள் உட்பட பலவிதமான அவசரமான பொருள்களை கொள்வனவு செய்ய இந்த நிதி பயன்படும்.

பொருள்களைக் கொள்வனவு செய்ய பல்கலைக்கழக அதிகாரிகள் கொழும்பு சென்றுள்ளனர். [உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டாலும் அரசிலிருந்து விலகப் போவதில்லை

## ஸ்ரீமானி அறிவிப்பு

கொழும்பு, நவ. 11

பொதுமக்கள ஐக்கிய முன்னணிக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டிருப்பினும், அதற்காக நாம் அரசில் இருந்து விலகி ஒருபோதும் ஐ.தே.கவில் இணைய மாட்டோம்.

அது போன்று என்ன நெருக்கடிகள் வந்த போதும் எமது தலைவர் அமரர் லலித் அத்துலத் முதலியின் கோட்பாட்டை விட்டு மாறமாட்டோம்.

காலி கோட்டையில் நடந்த ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அதன் தலைவரும், அமைச்சருமான ஸ்ரீமானி அத்துலத்முதலி மேற்கண்டவாறு கூறினார்.

இனப்பிரச்சினைத் தீர்வு நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதி ஆட்சி முறை உட்பட பல்வேறு விடயங்களில் ஸ்ரீமானி அத்துலத் முதலி அரசாங்கத்துடன் முரண்பட்டிருப்பது தெரிந்ததே. (இ-3)

# யாழ். மாவட்ட அபிவிருத்தி குறித்த திட்ட அறிக்கை

## ஜனாதிபதி கோருகிறார்

கொழும்பு, நவ. 11

யாழ். மாவட்ட அபிவிருத்தி குறித்த திட்டஅறிக்கைகளை உடன்சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ் மாவட்ட அபிவிருத்தியுடன் சம்பந்தப்பட்டஅமைச்சுக்கள் தமது திட்ட அறிக்கைகளை சமர்ப்பிக்காததால் வெளிநாட்டு நிதியைப் பெறுவது தாமதமாவதாகவும் — உடனடியாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் வடக்கு புனர்வாழ்வு அதிகார சபைக்கு தமது திட்ட அறிக்கைகளை வழங்க வேண்டும் என்றும் — ஜனாதிபதி கேட்டுள்ளார்

யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு 21 கோடி 50 லட்சம் டொலர் உதவி கோரி ஜனாதிபதி எட்டு மாதங்களுக்கு முன்பு மதிப்பீட்டு அறிக்கையை உதவி வழங்கும் நாடுகளுக்கு அனுப்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-150-3)

# ஓய்வூதிய வவுச்சர்கள் தபாலில்!

யாழ்ப்பாணம், நவ. 11

நல்லூர் பிரதேசத்தில் நிரந்தரமாக வதியும் ஓய்வூதியர்களின் நவம்பர் மாதத்திற்கான வவுச்சர்கள் நேற்று முன்தினம் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில், அரியாலை, யாழ்ப்பாணம் ஆகிய கிராமிய வங்கிகளின் ஓய்வூதியம் பெறுபவர்களின் வவுச்சர்கள் அந்தந்தக் கிராமிய வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ)

# சிதம்பரா நூற்றாண்டு தினம் இன்று

வடமராட்சி, நவ. 11

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி நூற்றாண்டு தினம் இன்றாகும்.

இன்றைய தினம் கல்லூரியில் எளிமையான சமய அனுஷ்டானங்கள் மேற்கொள்ளப்பட்டு நூற்றாண்டு தினம் அனுஷ்டிக்கப்படும்.

# குப்பி விளக்கால் எரிகாயம்

நித்திரையில் குப்பி விளக்குத் தட்டுப்பட்டு தீ பரவியதால் தம்பதியர் இருவர் காயமடைந்தனர்.

ஆனைக்கோட்டை உயரப்புலத்தில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் தேவசகாயம் ஜெபகாந்தன் (வயது 29), அவர் மனைவி ஜெயகாந்தன் மேரி றோஸ் (வயது 29) ஆகிய இருவரும் காயமடைந்தனர்.

படுத்திருந்தவாறு குப்பி விளக்கில் கதைப் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் மனைவி அப்படியே நித்திரையானதாகவும், நித்திரையில் விளக்கு தட்டுப்பட்டு தீ பரவியதால் அவர் கடும் எரிகாயங்களுக்கு உள்ளானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நித்திரையில் இருந்து விழித்த தான் மனைவியின் தீயை அணைக்க முயன்ற வேளையே தனக்கு தீக்காயம் ஏற்பட்டதாக கணவன் தெரிவித்தார்.

இருவரும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (உ-15)

# பசுவதை தடுப்பு கூட்டம்

யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-15மணிக்கு பசுவதை தடுப்பு சம்பந்தமான முக்கிய கூட்டம் ஒன்று நடைபெறும்.

இக் கூட்டத்திற்கு ஆலய தர்மகர்த்தாக்கள், இந்து இளைஞர் மன்றங்களின் நிர்வாகிகள் மற்றும் சைவ அபிமானிகளைத் தவறாது சமுகம் தருமாறு கேட்கப்பட்டுள்ளது (உ-30)

# அதிபர்கள் பரீட்சை

இலங்கை அதிபர் சேவையின் I, II, III ஆம் தரத்தில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான வினைத் திறமை காண்தடைப் பரீட்சை எதிர்வரும் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் [illegible] பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

---

உ

## வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்பாள் சங்காபிஷேக விஞ்ஞாபனம்

ஸவஸ்தி ஸ்ரீ நிகழும் மங்கள கரமான தாது வருடம் ஐப்பசித் திங்கள் 27 ஆம் நாள் (12—11—1996) செவ்வாய்க்கிழமை காலை 8-00 மணிக்கு மண்டலாபிசேக பூர்த்தியை முன்னிட்டு அஸ்டோத்தர (108) சங்காபிசேகமும், தொடர்ந்து விசேட பூசையும் நடைபெற்று அம்பாள் வீதிஉலாவரும் காட்சி இடம் பெறும்.

அவ்வமயம் அம்பிகை அடியார்கள் அனைவரும் பங்கு பற்றி அம்பாளின் இஸ்டசித்திகளைப் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

இங்ஙனம்:
அம்பிகை அடியார்கள்

(43588)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது சகமாணவன்
இ. தவமோகனின் சகோதரியான

**சுந்தரம்பாள் இரகுநாதன்**

09 - 11 - 96 இல் அகால மரணம் அடைந்து விட்டார்.
அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

கொக்குவில் இந்து 94 ஆம்
ஆண்டு மாணவர்கள்

(43586)

---

## மரண அறிவித்தல்

### திருமதி பிலோமினா அருளப்பு

மல்லாகம் புதுமை மாதா ஆலயத்தைச் சேர்ந்தவரும், சுன்னாகத்தில் வசித்தவருமான திருமதி பிலோமினா அருளப்பு இறையடி எய்திவிட்டார்

அன்னார் அருளப்பு (சுடரொளி அந்தியகால சேவை சுன்னாகம்) வின் அன்பு மனைவியும், ஞானமணி, மரியதாஸ் (ஜேர்மனி), தேவதாஸ் [ஆஸ்திரேலியா] ஆகியோரின் அருமைத் தயாரும், காலஞ்சென்ற மோசஸ் ஜேசுதாசன், கலாசெலஸ்மேரி [ஜேர்மனி], சித்திரா [ஆஸ்திரேலியா] ஆகியோரின் மாமியாரும், ஜெயா, ஞானா, திலக்ஷா [ஜேர்மனி] ஆகியோரின் பேர்த்தியாரும், ஞானப்பிரகாசம், அன்னம்மா, அருளம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல 20, டேவிற் வீதி, யாழ்ப்பாண இல்லததில் இருந்து இன்று [11-11-96] திங்கட்கிழமை பி.ப 3-00 மணிக்கு மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலியைத் தொடர்ந்து புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
செ. செ. யோகராசா

இல. 20, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம். [43587]

---

இரகசியங்களை வெளியிடும்

# ஆறு அமைச்சர்களின் நடவடிக்கை கண்காணிப்பு

## உளவுப் பிரிவினர் மும்முரம்

கொழும்பு நவ. 11

அமைச்சரவைக் கூட்ட இரகசியங்களை வெளியிடுவதாக நம்பப்படும் ஆறு அமைச்சர்களின் நடவடிக்கைகளை தேசிய புலனாய்வுப் பணியகம் கண்காணித்து வருவதாக 'மிட்வீக் மிரர்' தகவல் வெளியிட்டுள்ளது.

அரச உத்தரவொன்றின் மீது இவ்வமைச்சர்கள் பற்றி தேசிய உளவுப்பணியகம் அரசுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

அண்மையில் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஆறு அமைச்சர்கள் கூட்ட இரகசியங்களை வெளியிடுவதாக ஜனாதிபதி குற்றம் சாட்டியிருந்தார். அமைச்சர்களின் டெலிபோன்கள் ஒற்றுக் கேட்கப்படும் நிலை ஏற்படும் என்றும் அப்போது ஜனாதிபதி எச்சரித்திருந்தார். (உ-150)

# இந்திய மீனவர்களில் ஒருவரின் சடலம் மன்னாரில்

லண்டன், நவ 11

கடந்த 6 ஆம் திகதி இராமேஸ்வரத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்றவர்களில் 6 பேர் காணாமல் போயிருந்தனர். இவர்கள் சென்ற படகுகளில் ஒன்றின் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இதில் கர்ணன் என்ற மீனவர் சூடுபட்டு இறந்தார். இவரது சடலம் தற்போது தலைமன்னாரில் வைக்கப்பட்டுள்ளது.

இதே படகில் இருந்த ஏனைய 3 மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்துள்ளார்கள்.

இந்த 3 மீனவர்களும் தலைமன்னார் கடற்படை மருத்துவ மனையில் சிகிச்சை பெறுகிறார்கள்.

இவர்களை மீட்க தமிழக மீன்பிடி அமைச்சு அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர் (இ- 3)

# ஏப்ரல் புதுவருடத்தின் முன் தீர்வுகாண வேண்டும்

## நாடாளுமன்றில் தர்மசிறி அமைச்சர்

அரசியல் பேதம் பாராது நாம் அனைவரும் ஒன்றிணைந்து எதிர்வரும் தமிழ்—சிங்கள புதுவருடத்துக்கு முன்னர் இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரவேண்டும்.

இப்படி தகவல்துறை, உல்லாசப் பயணத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க நாடாளுமன்றத்தில் வரவு—செலவுத்திட்ட விவாதத்தில் பேசுகையில் கூறினார்

பொருளாதாரரீதியில் இப்போதைய யுத்தம் பெரிய பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனைகள் இப்போது நாடாளுமன்ற தெரிவுக் குழுவால் அலசி ஆராயப்பட்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார். [இ-3]

மட்டக்களப்பு நகரில்

# மோட்டார் சைக்கிள்களை வீதிகளில் நிறுத்தத் தடை

மட்டக்களப்பு, நவ: 11

மட்டக்களப்பு நகரில் வீதிகளில் மோட்டார் சைக்கிள் நிறுத்த படையினர் தடை விதித்துள்ளனர்.

வீதிகளில் நிறுத்தப்படும் மோட்டார் சைக்கிள்களின் டயர்களில் காற்று திறக்கப்படுகிறது.

காந்தி சதுக்கத்தில் மட்டுமே மோட்டார் சைக்கிள்கள் நிறுத்த வேண்டும் என்று படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

கொழும்பில் கூட இல்லாத சட்டங்கள் மட்டக்களப்பு நகரில் நடைமுறைப்படுத்தப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-150-3)

# ரத்வத்தைக்கு எதிரான முறைப்பாடு என்னாயிற்று?

## சி. ஐ. டியினரிடம் அனுரா கேள்வி

கொழும்பு நவ. 11

"அமைச்சர் ரத்வத்தைக்கு எதிராக நான் செய்த கிரிமினல் அவதூறு முறைப்பாடு குறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்?" —இவ்வாறு கேட்டு ஐ.தே.கவின் தேசியப் பட்டியல் எம்.பியான அனுரா பண்டாரநாயக்கா இரகசியப் பொலீஸ் பிரிவு இயக்குநர் ஓபதா கே. ஹேமச்சந்திராவுக்குக் கடிதம் எழுதியுள்ளார்

'முறைப்பாடு செய்து இரு மாதங்களாகி விட்டன. இது தொடர்பாக குழப்பகரமான செய்திகள் வெளிவந்துள்ளன. முறைப்பாடு குறித்து நீங்கள் எடுத்துள்ள நடவடிக்கைகளை அறிய விரும்புகிறேன்.' என்றும் அநுரா தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அனுரா ஆஸ்பத்திரியில் பிறந்தார் என்றும்—

அப்போது பிறந்த குழந்தைகளில் ஆள்மாறாட்டம் இடம் பெற்றதாகவும்—

அமைச்சர் ரத்வத்தை பொதுக்கூட்டம் ஒன்றில் பேசியிருந்தார். அதனை எதிர்த்தே அனுரா கிரிமினல் அவதூறு முறைப்பாடு செய்திருந்தார். [உ-150]

# கொள்ளையர் அறுவர் கைது

பல கொள்ளைகளில் சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் 6 சந்தேக நபர்களைக் நித்தம்புவ பொலீஸார் அண்மையில் கைது செய்தனர் அவர்களிடமிருந்து பொலீஸ், இராணுவ சீருடைகள் பெருந்தொகையாகக் கைப்பற்றப்பட்டன. பிஸ்டல்கள், பாவிக்கப்படாத ரவைகள், வாகனங்கள் ஆகியவையும் இச்சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. (உ-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] Branch Library

# இலங்கையில் அமெரிக்க இராணுவத் தளம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

பில் கிளின்டன் அமெரிக்க ஜனாதிபதியாக 2 ஆம் முறை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

குடியரசுக் கட்சி தோல்வியடைந்தது என்பதில் மகிழ்ச்சி.

1950 தொடங்கி அமெரிக்கா அனைத்து உலக நாடுகள் மீதும் ஏதாவது ஒரு வகையில் தனது ஆதிபத்தியத்தையும், தரகு முதலாளித்துவத்தையும் திணித்து வருவதற்கான விற்பன்னர்களாக அமைந்தவர்கள் குடியரசுக் கட்சியினரே.

ஆகையால் அவர்கள் தோற்றுப் போனதில் மகிழ்ச்சி.

2 ஆம் உலகப் போருக்குப் பின் கம்யூனிஸ்ட்போக்குடைய சோவியத் ரஷ்யாவின் வளர்ச்சி அமெரிக்காவில் அத்தகைய அணுகு முறையை நியாயப்படுத்துவதாக அமைந்தது.

உலகப் போருக்குப் பிந்திய 50 ஆண்டுகளில் 40 ஆண்டு காலம் வெள்ளை மாளிகை ஆட்சியை குடியரசுக்கட்சி தான் கட்டுப்படுத்தியது.

### ஒற்றை மையம்

சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து நமது உலகம் ஒற்றை மையம் கொண்ட உலகமாக மாறி நிற்கிறது. அதன் மையமாக அமெரிக்கா நிற்கிறது.

உலக நாடுகளின் அரசியல் பொருளாதாரப் போக்குகளை ஏதாவது ஒரு வகையில் பாதிக்கிற நிலையில் இன்று அமெரிக்கா உள்ளது.

இவ்வாறு ஒற்றை மையம் கொண்ட உலகமாக இருப்பது நல்லதேயல்ல; ஆபத்தானதும் கூட.

என்றாலும் இதுதான் இன்றைய கசப்பான உண்மை.

அடுத்தவொரு வல்லரசு அமெரிக்காவுக்கு சவால் விடும் அளவுக்கு வளர்கின்ற வரை இந்த கசப்பான உண்மையை சகலரும் ஏற்கத்தான் வேண்டும்.

இப்படிப்பட்ட ஒற்றை அதிகார மைய உலகில் ஒரு குடியரசுக் கட்சிக்காரரான பொப்டோல் வெள்ளை மாளிகையில் இருப்பதை விட ஜனநாயகக் கட்சிக்காரர் — அதுவும் பில் கிளின்டன் போன்ற ஒருவர் — இருப்பது ஆபத்துக் குறைவானது.

எனவேதான் உலகம் தழுவிய பார்வையில் அவரது தெரிவை விடுதலைப் புலிகள் வரவேற்றனர்; வரவேற்கின்றனர்.

### இந்தியாவுக்கு நல்வதல்ல

என்றாலும் அதிபர் கிளின்டனின் தேர்தல் இந்தியாவுக்கும் ஈழத்தமிழர்களுக்கும் நல்ல செய்தி அல்ல என்றே நாம் அவதானிக்க முடிகிறது.

உலக நாடுகள் யாவுமே பில் கிளின்டனின் தேர்தலை வரவேற்ற போது, இந்தியாவும், இந்திய பத்திரிகைகளும் ஆர்வம் இல்லாமல் உற்சாகக் குறைவோடு, ஒருவகை அவநம்பிக்கையோடுதான் வரவேற்றன.

கம்யூனிஸத்தின் உலகம் தழுவிய பின்னடைவுக்கு பின் சக்தி வாய்ந்த எந்த நாடும் உருவாகிவிடக் கூடாது என்பதில் அமெரிக்கா குறியாக இருக்கிறது.

அந்த வகையில் ஆசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவின் முதல் குறி இந்தியாவாக இருக்கிறது.

> அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக் கட்சி வேட்பாளர் பில் கிளின்டன் மீண்டும் வெற்றி பெற்றிருப்பது தொடர்பாக "வெரித்தாஸ்" வானொலி ஒலிபரப்பிய செய்திக் கண்ணோட்டம் இது.

இந்தியா அணுசக்தி நாடாக மாறிவிடக் கூடாது என்பதை உறுதி செய்ய அணு ஆயுதத் தடை ஒப்பந்தம் என்ற பெயரில் அமெரிக்கா முயன்று வருகிறது.

ஏவுகணைத் திட்டத்தைக் கைவிடுமாறு இந்தியாவை அமெரிக்கா அழுத்தி வருகிறது.

ஐ. நா. பாதுகாப்பு சபையில் இந்தியாவுக்கு நிரந்தர இடம் கிடைத்து விடாதபடி அமெரிக்கா செயல்படுகிறது.

காஷ்மீர் பிரச்சினையில் பல அழுத்தங்களை உருவாக்கி வருகிறது.

### சீனாவுடனான அமெரிக்க உறவு

இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக இந்தியாவின் மிகப்பெரும் அச்சம் சீனாவுடன் கிளின்டன் கொண்டுள்ள உறவு முறை.

தெற்காசிய பிராந்திய சமநிலையை இன்று மேலோட்டமாக சீர் தூக்கிப்பார்த்தால் அது இந்தியாவுக்கு பெரும் பாதகமாக அமைந்துள்ளது.

இந்தியா அணுகுண்டு தயாரிப்பது கூட பாகிஸ்தானைச் சமாளிக்கவே என்று வெளியில் கோஷங்கள் கேட்கின்றன.

உண்மையில் இந்தியாவுக்கு பாகிஸ்தான் ஒரு பொருட்டு அல்ல.

பாகிஸ்தானை பிரதான எதிரியாகக் காட்டினால் அரசியல் லாபம் இந்தியாவுக்கு உள்ளே உண்டு என்பதால் தான அத்தகைய தோற்றம் ஏற்படுத்தப்படுகிறது.

ஆனால் உண்மையில் இந்தியாவுக்கு இருக்கிற பயம் சீனாவைக் குறித்ததுதான்.

சீனாவினுடைய அபார இராணுவ பொருளாதார வளர்ச்சியும் சீனாவே வல்லரசாக வேண்டும் என்று அமெரிக்கா கொண்டுள்ள நோக்கமும் இந்தியாவுக்கு கவலை தரும் விடயங்களாகும்.

பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டங்களுக்குக் கூட சீனாதான் பின்புல உதவிகள் யாவும் செய்து வருகின்றது என்பதும்—

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க, பாகிஸ்தானால் இயக்கப்படும் தலிபான் குழுவே இப்போது அதிகாரத்தை பிடித்திருக்கிறது என்பதும்—

இந்தியா தெற்காசிய பிராந்தியத்தில் தனிமைப்படுத்தப்பட்டு நிற்பதையும், ஒரு நெருக்கடி வலயத்துள் சூழப்பட்டு நிற்பதையும் காட்டுகின்றன.

ஒரு குடியரசுக் கட்சி அதிபர் சீனாவுடன் கடுமையாக நடந்து கொண்டிருப்பார் என இந்தியா இப்போது நினைப்பதாகத் தெரிகிறது.

### இந்தியாவின் தெற்கே நிலைமை

இப்படி வடக்கு - மேற்கு எல்லைப்பகுதிகளில் அச்சுறுத்தலுக்குள்ளாகி இந்தியா நிற்கையில்—

தெற்கு முனையில் இலங்கையிலும் தனது அதிகாரக் கால் பதிக்க அமெரிக்கா முயன்று வருகிறது

ஈழத்தமிழர் போராட்டத்துக்கு எதிராக சமீபகாலமாக

(5 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு உணர்வை தமிழருக்கு ஏற்படுத்துவது அரசின் கடமை

தமிழர்களாகிய நாம் இன்று எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பல.

பொருளாதாரம், உறைவிடம், தொழில் வாய்ப்பு, உணவு, சுகாதாரம் போன்றவையும் அவற்றுக்கு மேலாக பாதுகாப்பும் இன்று பெரும் பிரச்சினைகளாக உள்ளன.

உயிருக்கு உத்தரவாதம் என்பது சிக்கல் நிறைந்த — கேள்விக்குரிய— விவகாரமாகியிருக்கின்றது.

### ஜனாதிபதியின் உணர்வு

ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க தான் வெளியிட்ட செய்தி ஒன்றில் —

தாமும் இரு குழந்தைகளின் தாய் என்றும் —

தங்கள் குழந்தைகள் தொடர்பாக ஒவ்வொரு பெற்றோரும் போற்றும் உணர்வுகளை — பிரிவால் அனுபவிக்கும் வேதனைகளை — தன்னால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும் என்றும் --

கணவரையும், தந்தையையும் அகால மரணங்களின் மூலம் பறிகொடுத்த தான்அப் பிரிவுகளின் வேதனையை உணர்வுபூர்வமாக அனுபவித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட உரும்பிராய் இளம் யுவதி ரஜினியின் தந்தைக்கு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா எழுதிய அனுதாபக் கடிதத்தில் இதே போன்று தமது உணர்வுகளையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இந்த உணர்வுகளின் வெளிப்பாடு வரவேற்கத்தக்கதே. ஆனாலும் 'தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்' என்ற பழமொழியும் இங்கு நினைவுக்கு வருகின்றது. ஒவ்வொரு பிரஜையும் தான் அனுபவிக்கும் — அல்லது தனது குடும்பம் எதிர்கொள்ளும் — பிரச்சினைகளை அடுத்தவர் புரிந்து கொள்வர் என்று எதிர்பார்க்க முடியுமா?

### குடும்ப உணர்வும் இன உணர்வும்

ஒரு குடும்பம் ஒருவரை இழக்கும் போது அக்குடும்பமே அதிர்ச்சியில் ஆழ்ந்து போகின்றது. அதேபோன்றதே இனங்களின் உணர்வும்.

ஓர் இனம் என்ற எண்ணம் வரும் போது அந்த இனம் முழுவதும் ஒரு குடும்பமாகி விடுகின்றது. அந்தக் குடும்பத்தில் ஒரு பிரஜையின் முறையற்ற இழப்பு அந்தக் குடும்பத்தை — அந்த இனத்தை முற்றாக அதிர்ச்சியில் ஆழ்த்தி விடுகின்றது.

இலங்கை மக்கள் அனைவரும் ஒரு குடும்பத்தவர்கள் என்ற தேசிய உணர்வு மங்கிப்போய், தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்ற இன உணர்வு மக்களால் புரியப்பட்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில் இந்த இன உணர்வுக்கு மதிப்பளிப்பது காலத்தின் கட்டாயமாகி விடுகின்றது.

அதனை அரசு நன்கு உணர்ந்து, அதனைத் தனது கருவியான அரச படைக்கு தெளிவுபடுத்துவது அவசியமாகும்,

சிக்கல் நிறைந்த இக்கால கட்டத்தில் — அரச படைகளின் பங்களிப்பு முக்கியமாக உள்ள இவ்வேளையில் — இதனை அரசுப் படைகளுக்கு புரியவைப்பது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இன்றியமையாததாகும்.

இரு இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான சூழ் நிலையை உருவாக்க எதோ ஒரு விதத்தில் இராணுவத்தின் உதவி தேவையாகிவிட்டது.

அதன் பணி மிகச் சாதுரியமாக மேற்கொள்ளப்பட வேண்டும். இல்லையேல் விபரீத விளைவுகள் ஏற்படும்.

**என். ஆர். ராமன்**

இராணுவம் தனது செயல்பாட்டில் நீதியாக நடந்து கொள்ளாவிட்டால் அரசாங்கம் என்ன முயற்சி எடுத்தாலும் தற்போதைய பிரச்சினைக்கு ஒரு சுமூகமான தீர்வைக் கொண்டு வந்து விட முடியாது.

இந்த விடயம் சரிவர கையாளப்படாவிட்டால், பிரச்சினைகள் கூர்மையடைந்து இரு இனங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் ஒன்றை ஒன்று அழிக்க அல்லது முற்றாக அடக்க எடுக்கும் முயற்சியின் இறுதி நிலையிலேயே அமைதி கிட்டும்.

எனவே தமிழ் மக்கள் மத்தியில் இராணுவத்தின் அணுகுமுறை என்பது மிக முக்கியமான அம்சமாகும். இதன் ஆழத்தை திரும்பத் திரும்ப இராணுவத்தினருக்கு — சிப்பாய்களுக்கு — எடுத்துக் கூறுவதினால் மட்டும் அவர்களுக்கு உணர்த்திவிட முடியாது. தக்க நிர்வாக ... முறையற்ற கொலைகள் — காணாமல் போதல்கள் போன்றவை தொடர்பான இறுக்கமான கட்டுப்பாடுகளும் கடுமையான தண்டனைகளும் அவற்றைப் பகிரங்கப்படுத்துவதன் மூலம் ஏனைய சிப்பாய்களுக்கு அக்கட்டுப்பாடுகளின் இறுக்கத்தை உணர்த்துவதும் அவசியமாகின்றன.

### சரியான அதிகாரிகளை தேர்ந்தெடுத்தல் அவசியம்

சந்தேகத்தின் பேரில் கைது செய்தல், தடுத்து வைத்தல், விசாரணை செய்தல் போன்றவற்றால் அப்பாவிப் பொது மக்களும் பாதிக்கப்படுகின்றனர். எனவே இத்தகைய மனிதாபிமான பிரச்சினைகளைக் கையாளுவதற்கு சிந்தித்து, செயலாற்றக் கூடிய — விரைவில் உணர்ச்சி வசப்படாத — நிலைமைகளை நன்கு புரிந்துகொள்ளக் கூடிய — இராணுவ அதிகாரிகளை அத்தகைய பொறுப்புகளில் இருத்துவதும் அவசியமாகும்.

அதைவிடுத்து, கண்ட கண்ட இடங்களிலும், சோதனைச் சாவடிகளிலும், சிப்பாய்கள் தமக்கு விரும்பியவாறு விசாரணைகளை மேற்கொள்ளவும் முடிவுகளை எடுக்கவும் அனுமதிப்பது நிலைமையை மேலும் சிக்கலிலேயே கொண்டு போய்த்தள்ளும்.

இராணுவத்தில் உள்ளவர்கள் அனேகமானோர் இளைஞர்கள்; சக்தி வாய்ந்த ஆயுதங்களைத் தம் கையில் வைத்திருப்பவர்கள்; ஒரு குழாமாகச் செயற்படுபவர்கள்; பெரும்பாலும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இன்னொரு இனப் போராளிகளால் தாக்கப்படும் போது அவர்கள் மனம் விகற்பமாகி விடுவதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆனால் இது விடயத்தில் அவர்கள்தமது எண்ண உணர்வு பிரதிபலிப்புகளுக்கு ஏற்ப தம்பாட்டில் பதிலளித்துச் செயற்பட அனுமதித்தால் விளைவு அழிவாகத்தான் முடியும்.

இதனால் தான் இராணுவ விவகாரத்தில் மேலும் இறுக்கமான நிலைப்பாட்டை அரசு பின்பற்ற வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

### பொது மக்களின் செயற்பாடு

இதே சமயத்தில் பொது மக்களின் செயற்பாடுகளும் சில தவறான வழிமுறைகளுக்கு படையினரை இட்டுச் செல்கின்றன என்பதை நாம் மறந்துவிட முடியாது.

அப்பாவிப் பொதுமக்களையும், தனது எதிரிகளையும் இனம் காண்பதில் இராணுவத்துக்கு சிக்கல் உள்ளன. அதனைப் பயன்படுத்தி பணத்துக்காகவும், பகைமை உணர்வைச் சாதிப்பதற்காகவும், சுயலாபத்துக்காகவும் சிலர் பிழையான முறைகளைக் கையாண்டு இராணுவத்தின் தவறுகளுக்கு துணை போகின்றார்கள், இத்தகைய செயல்களினால் அப்பாவிகள் கைது செய்யப்படுகிறார்கள்; தடுத்துவைக்கப்படுகிறார்கள்; தண்டிக்கப்படுகிறார்கள்; இம்சிக்கப்படுகிறார்கள்; சில சமயங்களில் காணாமலும் போகிறார்கள்.

இத்தகைய தீயவர்களின் தவறான வழிநடத்தலையும் இராணுவம் புரிந்து கொண்டு புத்திசாதுரியமாக செயற்பட வேண்டும்.

தமிழ் மக்களுக்கு உரிய பாதுகாப்பு உணர்வை அவர்கள் மனதில் ஏற்படுத்துவது அரசின் கடமை.

தமிழர்கள் கௌரவ பிரஜைகளாக நாட்டில் சம அந்தஸ்தோடு வாழ்வதற்கு — அவர்களின் பாதுகாப்பு உணர்வுகளைப் புரிந்து கொண்டு — அதற்குரிய வகையில் திட்டங்களை வகுத்து, நடைமுறைப்படுத்துவது இன்றைய கட்டாயமாகும். அதனூடாகவே ஒரு நம்பிக்கை நிறைந்த தேசத்தை உருவாக்க முடியும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**25 ரூபாவிற்கு நாவல்**

அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் அக்கரைச்சீமையில் இங்கிலாந்து சென்ற இலங்கையரது சுவையான கதை. சாந்தி என்ன எதிர் பார்ப்புகளுடன் இங்கிலாந்து போனாள்? அவளுக்கு நடந்தது என்ன? பூபாலசிங்கம், புத்தகசாலை. (43446)

**O/L சித்திரம்**

1996 / 1997 ஆம் ஆண்டுகளில் பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு சித்திரம் 1ற்குரிய வினாவும் விடையும் விளக்கப் படத்துடன் தேவைப்படும் மாணவர்கள் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: ச. துரைவீரசிங்கம், சித்திர ஆசிரியர், 76, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம். A/L 1997 / 1998 க்குரிய சித்திர வகுப்பு நடைபெறுகிறது. (8970)

**இடமாற்றம்**

பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்த சில்லாலை வைத்தியசாலை தற்போது 70/2 பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்ட சந்திக்கு அருகாமையில் மாற்றப் பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத் தருகிறோம். — திருமதி R. கமலினி. (43584)

## சிறைச்சாலை பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, நவ. 11

மட்டக்களப்பு சிறைச்சாலையின் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது.

சிறைச்சாலையைச் சுற்றி உள்ள சுவர்களுக்குக் கம்பி அடித்து, பெரிய கேடர்கள் பொருத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

திருகோணமலைச் சிறைச்சாலையில் இருந்து தமிழ்க் கைதிகள் தப்பியதையடுத்தே இப்பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளது. (இ-3-150)

## ஜனாதிபதிக்கு சிவசிதம்பரம் செய்தி

கொழும்பு, நவ. 11

வன்னியில் இருந்து வந்து வவுனியாவில் தற்காலிக முகாம்களில் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் மக்களின் துன்பங்களைப் போக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் ஜனாதிபதிக்குச் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார். (இ-3)

## வைத்தியம்

செங்கமாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைமால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேற்றின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[43460]

## வாழ்த்துகிறோம்

**யா/சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை**

# நூற்றாண்டு நிறைவு

இன்று (**11 - 11 - 1996** இல்) கல்விச்சேவையில் நூற்றாண்டைப் பூர்த்தியாக்கி, நூற்றியொராவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் எமது கல்லூரி மேலும் பல்லாண்டு கல்விப்பணியில் ஈடுபட்டு அதன் பணி தொடர வாழ்த்துகிறோம்.

இன்று அதையொட்டி நண்பகல் 12.00 மணியளவில் கல்லூரியில் சமய நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. அதில் கலந்து சிறப்பிக்குமாறு அனைத்து ஆர்வலர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர், பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(4ε569)

## 1-ம் வருட நினைவஞ்சலி

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 24 — 10 — 1914 | | 11 — 11 — 1995 |

### பே. அன்னபூரண ராசநாயகம்

(வல்வெட்டித்துறை - பீற்றரம்மா பாண்கடை)

எங்கள் குடும்பத்தில் தாய்க்குத்தாயாக எங்களைப் பாசத்துடன் வழி நடத்திய அன்புத்தெய்வமாகிய அம்மாவே!


ஆண்டு ஒன்று மறைந்தாலும் எம்உயிர் உள்ளவரை உங்களை மறவோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக யாழ். ஆச்சிரம குழந்தை யேசு கோவிலில் இன்று (11-11-1996) திங்கள் காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பெறாமக்கள், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

A.G. செல்வராசா,
107, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

[43582]

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சபாபதி தங்கராசா

| மண்ணுலகில்: | விண்ணுலகில்: |
|---|---|
| 01—03—1937 | 28—10—1989 |

திதி: 11-11-1996

ஆண்டேழு போனாலும்
ஆறவில்லை உம் பிரிவுத்துயரம்
ஆண்டவனடியடைந்த ராசாவே
ஆண்டாண்டு போனாலும்
அவனியில் உம் நினைவே
எனை வழி நடத்தும்

த. கமலாதேவி.
(மனைவி)

சுதுமலை வீதி,
தாவடி.

[43492]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்புநோக்குநர்

ஆகக்குறைந்தது மூன்று வருட ஒப்புநோக்கும் அனுபவம் உள்ளவர்களிடமிருந்து மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பத்திரிகைகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் இராணுவக் காவலரண் பகுதிக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

அச்சகங்களில் ஆகக் குறைந்தது ஒரு வருடத்துக்கு ஒப்புநோக்குநர்களாகப் பணிபுரிந்தோர் ஒப்புநோக்குநர் பயிலுநர் பதவிகளுக்குப் பரிசீலனை செய்யப்படுவர்.

முழுமையான சுய விவரங்களுடன் 18-11-1996 ஆம் திகதிக்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கவும்.

முகாமையாளர் (ஆளணி),
உதயன் வெளியீட்டகம்,
292/2, நவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

உ



சுவாமி விவேகானந்தரின் யாழ். வருகையின்

## நூற்றாண்டு விழா

## மாணவர் வினாப் போட்டி

(1) கொழும்பில் சொற்பொழிவாற்றியபின் சுவாமிஜி யாழ்ப்பாணம் வர எத்தனை நாள்கள் எடுத்தன?

(2) இவரது இப்பிரயாணத்தில் எத்தனை இரவுகள் இவர் நித்திரை செய்யவில்லை?

(3) இவரைச்சந்திக்க இந்தியாவிலிருந்து வந்த சகோதர சீடரின் பெயர் என்ன?

(4) யாழ்ப்பாண விஜயத்தின்போது தரிசனம் பெற்ற மக்கள் தொகை எவ்வளவு?

(5) விழாப்பந்தலில் சுவாமி விவேகானந்தரை வரவேற்று மாலை அணிவித்தவரின் பெயர் என்ன?

(6) யாழ். இந்துக்கல்லூரியில் வேதாந்தம் பற்றி பேசிய சுவாமிஜி எவ்வளவு நேரம் பேச எடுத்தார்?

(7) இச்சொற்பொழிவில் கூடிய மக்கள் கூட்டத்தின் தொகை எவ்வளவு?

(8) சுவாமிஜியின் சொற்பொழிவை அடுத்து தொடர்ந்து பேசியவர் யார்?

(9) சுவாமி விவேகானந்தரின் ஊர்வலத்தில் சுவாமிஜியுடன் முதலாவது வண்டியில் (Carriage) இருந்த இருவரினதும் பெயர்கள் என்ன?

(10) வேதாந்தம் என்ற சொற்றொடரில் பேசிய சுவாமிஜியின் சொற்பொழிவின் முக்கியத்துவம் யாது? (5 வசனங்களில் தருக)

★ சுருக்கமான பதில்கள் தருக.

★ இப்போட்டியில் யாழ். மாவட்ட க. பொ. த. உயர்தர வகுப்பு மாணவர்கள் மாத்திரம் தங்கள் கல்லூரி அதிபர்களின் அத்தாட்சியுடன் பங்குபற்றலாம்.

★ அதிபரின் அத்தாட்சியுடன் விடைகள் 31 - 12 - 96 இற்கு முன் கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும்.

★ முதல் பரிசு:- ரூ 5,000
★ இரண்டாம் பரிசு:- ரூ. 2,000
★ மூன்றாம் பரிசு:- ரூ. 1,000
★ மேலும் 10 ஆறுதல் பரிசுகள்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

முக்கிய குறிப்பு:-
போட்டி வினாக்கள் சம்பந்தமாக எவ்வித தொடர்பும் சேவாச்சிரமத்துடன் வைத்திருக்க முடியாது.

(சி-3435)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி சிவபாக்கியம் ஜவகர்லால்

(முன்னாள் ஆசிரியை, யாழ்/வட்டு. இந்துக் கல்லூரி)

கடமையில் கண்ணியமும், உள்ளத்தில் உயர்வும் கொண்டு இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் கல்லூரியின் உயர்வுக்கு உழைத்த திருமதி சிவபாக்கியம் ஜவகர்லால் அவர்கள் முருங்கனில் காலமானார். அவரின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யாழ்/வட்டு. இந்துக்கல்லூரி,
சித்தங்கேணி.

[43585]

# அரசு விற்கும் கூட்டுத்தாபனங்களை வாங்குவதற்கு புலிகள் முயற்சியாம்!

## அதனால் விற்பனை ஏற்பாடு ஜனாதிபதியால் நிறுத்தம்

கொழும்பு, நவ. 11

சில அரச கூட்டுத்தாபனங்களைத் தனியார் மயப்படுத்துவதை ஜனாதிபதி சந்திரிகா நிறுத்திவைத்துள்ளார் என்று ''மிட்வீக் மிரர்'' ஆங்கில வார இதழ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அரச கூட்டுத் தாபனங்களைத் தனியார் மயப்படுத்தும் போது அவற்றினை வாங்குவதற்கு விடுதலைப் புலிகள் திட்டம் வகுத்துள்ள தகவல் வெளியானதை அடுத்தே ஜனாதிபதி இந்த நடவடிக்கை எடுத்திருப்பதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தகவல் வெளியிட்டிருக்கிறாராம்.

'சீநோர்' நிறுவனத்தை விடுதலைப் புலிகள் வாங்கக் கூடுமானால் துறைமுகங்கள் மற்றும் அது தொடர்பான அரச அலுவலகங்களுக்கும் விடுதலைப் புலிகள் இலகுவாக ஊடுருவ முடியும் என்றும் அந்த அமைச்சர் சொன்னார்.

'சீநோர்' நிறுவனத்தை வாங்குவதற்கு புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்பதற்கான பலமான ஆதாரங்களை புலனாய்வு வட்டாரங்கள் அரசுக்குத் தெரிவித்தனவாம். தோட்டத் தொழிற்றுறையிலும் தொழிற்சாலைகளை வாங்கும் திட்டமும் புலிகளிடம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உதயன்

### மனித நேயம் வளரட்டும்!

வயாவிளான் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர்களும், பழைய மாணவர்களும் இணைந்து புதுமை ஒன்றைச் செய்திருக்கிறார்கள்.

இராணுவ நடவடிக்கை காரணமாக தமது வீட்டை இழந்த பாடசாலையின் தொழிலாளி ஒருவருக்கு ஆசிரியர்களும் பழைய மாணவர்களும் சேர்ந்து இருபதினாயிரம் ரூபா செலவில் சிறிய வீடு ஒன்றைக் கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளனர். அதற்கான பணமும் வழங்கப்பட்டு விட்டது.

இந்தச் செயற்பாடு முற்று முழுதாக மனித நேயமானது. சம்பந்தப்பட்ட தொழிலாளியும் ஒரு வகையில் அரசாங்க ஊழியராகக் கருதப்பட வேண்டியவரே. இராணுவ நடவடிக்கையால் அவர் இழந்துபோன வீட்டைக் கட்டிக்கொள்வதற்கு அரசாங்கமே உதவ வேண்டும் — நஷ்ட ஈடு வழங்க வேண்டும்.

அரசு தனக்குள்ள அந்தப் பொறுப்பை உடனடியாகவும் முழுமையாகவும் செய்ய மாட்டாது என்பது பரம இரகசியம். இன்னும் இரண்டு, மூன்று வருடங்களின் பின்னர் சொற்ப தொகையாவது அரசு இந்தத் தொழிலாளிக்கு வழங்குமா என்பது சந்தேகத்துக்கு உரியதுதான்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கைகளின் போது நிர்மூலமான மற்றும் சேதமடைந்த வீடுகளைத் திரும்பக் கட்டுவதற்கு — நஷ்ட ஈடு வழங்குவதற்கு — பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா தேவை. அந்தளவு பெரிய தொகைப் பணம் ஸ்ரீலங்கா அரசிடம் எங்கே?

போரைத் தொடர்ந்து நடத்துவதற்கு பொ. ஐ. மு அரசு முடிவு செய்திருக்கிறது. அதற்கான கால அட்டவணையும் அடுத்த வருடம் – 1997 ஆம் ஆண்டு – டிசம்பர் மாதம் என்று இப்போதைக்கு வழங்கப்பட்டிருக்கிறது; நீடிக்கப்பட்டுள்ளது.

ஆகையால், போருக்குப் பணம் திரட்டுவதற்கு அரசு சகல வளங்களையும், ஆதரவுகளையும் பயன்படுத்த முனைந்திருக்கிறது. அதனால் இராணுவ நடவடிக்கையால் தரைமட்டமான அல்லது சேதமான யாழ்ப்பாணக் குடாநாட்டு வீடுகளின் சொந்தக்காரர்களுக்கு இப்போதைக்கு நஷ்ட ஈடு ஏதாவது கிடைக்கும் என்று எதிர்பார்க்க நியாயமில்லை.

போர் ஒழிந்து சமாதானமும் அமைதியும் உருவான பின்னர் இப்பகுதியின் புனர்நிர்மாணத்துக்கு வெளிநாடுகள் உதவி செய்ய முன்வந்தால் மட்டுமே, குடாநாட்டில் அழிந்துபோன உடமைகளுக்கு நஷ்ட ஈடு கிடைக்கும் வாய்ப்பு உண்டு.

அதுவரை வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத் தொழிலாளி செபஸ்ரீயான் எஸ்தாக்கியும் அவரது குடும்பமும் எங்கே குடியிருப்பது? அப்பாடசாலையின் ஆசிரியர்களும், பழைய மாணவர்களும் அவருக்குச் செய்த உதவி காலத்தால் செய்த பேருதவி. இத்தகைய மனித நேய உதவிகளே நொந்து போயுள்ள எமது மக்களுக்குத் இன்று தேவைப்படுகின்றன.

இத்தகைய மனிதப்பண்பும் மனித நேயமும், மனிதாபிமானமும் எமது மக்களிடையே படர்வினால் தான், இன்றைய தாழ்வுற்ற நிலையிலிருந்து தமிழர் சமூகம் விடுபட்டு ஓரளவேனும் தலை உயர்த்தலாம்.

# குடும்பத்துக்கு மூன்று கிலோ பங்கீட்டு முறையில் சீனி!

யாழ்ப்பாணம், நவ. 11

சீனிக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டையடுத்து — குடும்பம் ஒவ்வொன்றுக்கும் பங்கீட்டு அடிப்படையில் மூன்று கிலோ சீனி வழங்க யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பிரிவு பணித்துள்ளது.

இதற்கான சீனியை செயலகக் களஞ்சியத்தில் பெற்று விநியோகிக்கும்படி ப. நோ. கூ. சங்கங்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளன.

அதேவேளை — தற்சமயம் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்துள்ள கப்பல்களில் சீனி எடுத்துவரப் பட்டுள்ளதாகவும் —

அவை இறக்கப்பட்டதும் தட்டுப்பாடு நீங்கும் என்றும் — செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சீனி தற்போது தனியார் கடைகளில் கிலோ 45 முதல் 50 ரூபா வரை விலையில் விற்பனையாகிறது. (உ–3)

### தாதியர் வேலை நிறுத்த முஸ்தீபு

நீண்ட காலமாக இருந்து வரும் சம்பள முரண்பாடுகளை நீக்கத் தவறினால் சம்பள உயர்வு கோரி விரைவில் வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக பொதுச் சேவைகள் ஐக்கிய தாதிகள் யூனியன் சுகாதார அமைச்சர் பௌஸிக்கு அறிவித்துள்ளது.

எப்போது வேலை நிறுத்தம் செய்வது என்பது பற்றி தீர்மானிப்பதற்காக சங்கத்தின் நிறைவேற்றுக்குழு விரைவில் கூடும் என்று சங்கத்தின் தலைவர் வண. முருத்தெட்டுவ ஆனந்ததேரர் தெரிவித்தார்.

# இன்றுமுதல் 6 நாள்களுக்கு கந்தசஷ்டி விரதம்

யாழ்ப்பாணம், நவ 11

முருகன் ஆலயங்களிலும் முருகன் விக்கிரகம் உள்ள ஏனைய ஆலயங்களிலும் கந்த சஷ்டி விரத அனுஷ்டானங்கள் இன்று தொடங்கி ஆறு நாள்களுக்கு தொடர்ந்து இடம் பெறும்.

16 ஆம் திகதி சனிக்கிழமை சூரன் போரும், 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை திருக்கல்யாணமும் இடம் பெறும்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று மாலை 4 மணிக்கு கந்தசஷ்டி விரத பூசைகள் ஆரம்பமாகும்.

சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சூரசங்காரமும், ஞாயிறு காலை 10.15 மணிக்கு திருக்கல்யாணமும் இடம் பெறும்.

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் கந்தசஷ்டி விரதத்தை ஒட்டி இன்று முதல் ஆறு நாள்களுக்கு தினசரி மாலை 4 மணிக்கு தீர்த்தப் பூசை இடம் பெறும்.

சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் சூரசங்காரமும் மாலை 5 மணியளவில் விசேட அபிஷேகப் பூசையும், நள்ளிரவு 12 மணியளவில் உத்தியானப் பூசையும், அதிகாலை 4 மணிக்கு பாரணைப் பூசையும் —

ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் தெய்வானை அம்மன் திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும்.

மேற்படி காலங்களில் இவ்வாலயத்திற்கு வரும் அடியார்கள் சுற்றாடல் மடங்களில் தங்கி பூசை வழிபாடுகளில் கலந்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ–4–30)

### கந்தபுராண படிப்பு

கொழும்புத்துறை, நவ. 11

கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் இன்று ஆரம்பமாகும் கந்தசஷ்டி விரத பூசைகளுடன் தினமும் நண்பகல் 12:30 மணிக்கு கந்தபுராண படனம் வாசித்துப் பயன் சொல்லும் நிகழ்வு இடம்பெறும்.

# கந்த சஷ்டி விரதமும் கவசமும்

முருகப் பெருமானின் திருவருளைப் பெறும் நோக்குடன் அனுட்டிக்கப்படும் விரதங்கள் மூன்று. அவை வெள்ளிக்கிழமை விரதம், கார்த்திகை விரதம், கந்த சஷ்டி விரதம் என்பன.

கந்த சஷ்டி விரதம் ஐப்பசி மாத பூர்வபக்கப் பிரதமைத் திதி முதல் சஷ்டி வரை உள்ள ஆறு நாள்கள் அனுட்டிக்கப்படும். இந்த விரதம் அனுட்டிக்க விரும்புவோர் கடைப்பிடிக்க வேண்டிய விதி முறைபற்றிய விவரங்களைக் கந்த புராணத்தில் காணலாம்.

தினமும் அதிகாலையில் நீராடி சந்தியாவந்தனம் முதலாய காலைக் கடன்களைக் குறைவர முடித்து, முருகப் பெருமானை அன்புடன் வழிபாடு செய்து, பகலில் அவருடைய ஈடு இணை இல்லாத புகழைப் பாடி, கேட்டு, இரவில் நல்ல நீர் சிறிது அருந்தி ஆறு நாளும் முடிந்த மறுநாள் காலை நீராடிக் கந்தவேளுக்குச் சிறந்த வழிபாடுகள் இயற்றிப் பின்னர் பாரணம் பண்ணல் வேண்டும் — என்பது கந்த புராணம் குறிப்பிடும் விதி.

ஆனால் அவ்வாறு ஆறு நாள்கள் நீர் மட்டும் அருந்தி விரதம் இருக்க இயலாதவர்கள், ஐந்து நாள்கள் மாலை வேளை பால்பழம் உண்டு ஆறாவது நாளான சஷ்டி அன்று உபவாசம் இருந்தும், பால்பழம் உண்டு விரதம் இருக்க முடியாதவர்கள் ஐந்து நாள்கள் உச்சிவேளை முருகப் பெருமானுக்கு நிவேதித்த உணவை உண்டு இரவு பட்டினி இருந்து ஆறாவது நாள் உபவாசம் இருந்தும் விரதத்தைப் பூர்த்தி பண்ணும் முறை தொன்று தொட்டு நம்மவர்களால் கடைப் பிடிக்கப்படும் வழக்கமாக இருந்து வந்துள்ளது.

விரதகாலமாகிய ஆறுநாள்களிலும் ஓதக்கூடியதும் முருகப் பெருமானின் பெருமைகளையும் புகழையும் எடுத்துக் கூறுவதும் ஆன நூல்கள் பல உண்டு கந்தர் அலங்காரம், கந்தர் அனுபூதி, கந்தர் அந்தாதி, திருமுருகாற்றுப் படை, கந்தர் கலிவெண்பா, கந்த சஷ்டி கவசம் ஆகியனவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றில் எல்லோராலும் இலகுவாக ஓதக் கூடியதும் உருவில் சிறியதுமாக அமைந்தது கந்தர் சஷ்டி கவசம். இதைப்பாடியருளியவர் தேவராசன் என்பவர்.

தேவராசன் தமிழையும் வட மொழியையும் குரு குல முறையில் கற்றுப் புலமை பெற்றவர். முருகப் பெருமான் மேல் மாறாத பக்தி கொண்டவர்.

ஒரு முறை தேவராசனுக்குக் கொடிய சூலை நோய் (வயிற்றுநோய்) உண்டாகியது. மருந்துவர்கள் பல வைத்திய முறைகளைக் கையாண்டும் நோய் குணமடையவில்லை. பரசமய வழி சென்று ஒழுகிய அப்பர் அடிகளுக்குச் சிவபிரான் திருவுளப்படி உண்டாகிய சூலை நோயின் ஞாபகம் வந்தது தம்மை வருத்தும் சூலை நோய்க்கு வைத்தியம் செய்வது பைத்தியக்காரத்தனம் என்று உணர்ந்தார்.



கந்த சஷ்டி சிந்தனை 1

திருச்செந்தூர் முருகப் பெருமானின் ஞாபகம் வந்தது. செந்தில் ஆண்டவனைச் தரிசிக்கும் ஆவல் மேலிட அங்கு சென்றார். அங்கு அவர் சென்ற தினம் கந்த சஷ்டி விரதத்தின் முதல் நாள் ஆகும்.

செந்தில் வேலவர் சந்நிதிக்குச் சென்றதும் தன்னை நெடுநாள் வருத்திய சூலை நோய் சிறிது குறைந்ததை உணர்ந்த தேவராசன், பெருமானின் திருவருளை நினைந்து உருகி ஆனந்தக்கண்ணீர் அருவியாகப் பெருக கந்தன் புகழைப் பாடத் தொடங்கினார்.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு படை வீட்டைக் கருத்திற் கொண்டு ஆறு பாடல் களைப் பாடினார். இப்பாடல்கள் கந்தர் சஷ்டி கவசம் என்ற சிறப்புப் பெயர் பெற்றன.

இன்று நாம் ஓதும் ''ஷஷ்டியை நோக்கச் சரவணபவனார்.'' என்று தொடங்கும் பாடல் இரண்டாவது படை வீடாகிய திருச்செந்தூர்ப் பதியைச் சார்ந்தது. இதைப் போலவே மற்றைய படை வீடுகளைச் சார்ந்த பாடல்களும் பக்திச் சுவையும் பொருட் சுவையும் நிறைந்தவை.

முருகவேளின் திருவருளால் தேவராசனைத் துன்புறுத்திய சூலை நோய் அகன்றது. ஆனால் தேவராசன் செந்தில் பதியை விட்டு அகலாமல் காவியுடை தரித்துத் துறவு பூண்டு அங்கேயே தங்கி, தேவராய சுவாமிகள் என்ற நாமத்துடன் விளங்கி வந்தார்.

கந்த சஷ்டி கவசத்தைப் பக்தி சிரத்தையுடன் ஆசார சீலர்களாய், அதில் கூறப்பட்டுள்ள விதிப்படி ஓதுபவர்கள் பேய், பூதம், பிசாசு, பில்லி, சூனியம், பிணி, பகை என்பன வற்றால் வரும் துன்பங்களினின்றும் விடுதலை பெற்று செல்வம் நன்மக்கட் பேறு நீண்ட வாழ் நாள் போன்ற ஏனைய பாக்கியங்களைப் பெற்றுச் சிறப்புடன் வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில் தேவராய சுவாமிகளால் பாடப்பட்டது.

இகத்தில் உடலைக் காக்கும் கவசமாக அமைவது மட்டுமன்றி, ஞானத்தையும், மோனத்தையும் அருளுவதுடன், பரத்தில் முத்தியையும் அளிக்கவல்ல கந்த சஷ்டி கவசம் முருக பக்தர்களுக்கு தேவராய சுவாமிகள் அளித்த அரிய செல்வம் ஆகும்.

மூளாய் அருணாசலம்

### நாளை

ஐப்பசி 27
செவ்வாய்க்கிழமை
திதி: பிரதமை
முற்பகல் 9 32 வரை.
நட்சத்திரம்: அனுஷம்
பின்இரவு 12.42வரை.
ராகுகாலம்: 3.07-4.37
சுபநேரம்: 10 37 – 12.07
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

உதயன் ...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா அடுத்து வருகின்ற நிலைப்பாடு, வேறு ஏதோ சில விடயங்களில் அமெரிக்காவுக்கும், ஜனாதிபதி சந்திரிகா அரசுக்கும் இடையே இரகசிய உடன்பாடுகள் ஏற்பட்டு இருக்கலாம் என்பதையே சுட்டிக் காட்டுவதாக ஆய்வாளர்கள் அவதானிக்கின்றார்கள்.

அமெரிக்க இராணுவ தளம் ஒன்று இலங்கையில் அனுமதிக்கப்பட்டால் கூட அது ஆச்சரியப்படுவதற்குரிய செய்தி அல்ல என்றும் கூடச் சொல்லப்படுகிறது.

''வோய்ஸ் ஒவ் அமெரிக்கா'' தளம் இலங்கையில் இப்போது அமைக்கப்படுவது இதற்கான முதல்படியாகக் கூட இருக்கலாம்.

அப்படி இந்தியாவின் தெற்கு முனையிலே அமெரிக்க இராணுவ சக்தி நிலை கொள்ளுவது போல மோசமான செய்தி இந்தியாவுக்கு வேறு ஒன்றும் இருக்க முடியாது.

சிங்களவரை நம்பி இந்தியா மோசம் போய்விடாமல் ஈழத்தமிழ் மக்களோடு நிரந்தர உறவை இப்போது ஏற்படுத்திக் கொள்வது தான் நீண்ட கால அளவில் இந்தியாவின் தெற்கு முனைப் பாதுகாப்புக்கு உதவும் என்பதே எமது எண்ணம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பும் உதவியும் புலிகளுக்குக் கிடைத்துள்ளன என்று சில படைவீரர்கள் திட்டவட்டமாகக் கூறியுள்ளனராம்.

இத்தகைய 'வாழும் முகவர்கள்' (Life Agents) தேவைப்படும் சமயங்களில் துரிதமாகச் செயற்படுவார்கள் என்று குறிப்பிட்ட சிரேஷ்ட அதிகாரி ஒருவர், இந்த முகாம் வீழ்ச்சி குறித்து விசாரணை நடத்தும் இராணுவ நீதிமன்றத்தின் இறுதி அறிக்கை கிடைத்த பின்னரே உண்மை வெளியாகும் என்று சொன்னார்.

இது குறித்து மற்றொரு பாதுகாப்புப் படையின் உயரதிகாரியிடம் கேட்டபோது, சம்பந்தப்பட்ட சந்தேக நபர் முகாம் வீழ்ச்சியின் போது காயமடைந்தார் என்பதற்கு சாட்சியங்கள் இருப்பதாகக் கூறினார்.

இந்தச் சந்தேகநபர் சமரின் போது புலிகளின் தாக்குதலில் இறந்தாரா? தற்கொலை செய்து கொண்டாரா? தப்பினாரா? அல்லது புலிகளால் காப்பாற்றப்பட்டாரா? — என்பது தெளிவாகத் தெரியவில்லை.

என்றாலும் சம்பந்தப்பட்ட நபர் தங்களுக்காக பணிபுரியும்படி புலிகளால் இணங்க வைக்கப்பட்டாரா என்பது குறித்து இவ்வளவு நேரகாலத்துடன் முடிவு செய்துவிட முடியாது என்று அந்த சிரேஷ்ட அதிகாரி குறிப்பிட்டார்.

சுமார் 1300 க்கும் அதிக படையினரைக் கொண்ட இந்த முகாமை இவ்வளவு வேகமாக— அதிரடியாக— துடிப்புடன்—புலிகள் வீழ்த்தியிருப்பது அதிர்ச்சி தருவதாக இருந்தது என இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டனர் என்று கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

நீண்ட தூர தாக்குதல் ஆயுதங்கள் உரியமுறையில் செயல்படத்தவறியமையும்—

விடுதலைப் புலிகள் முகாமைக் கைப்பற்றிய லாவகமும் —

அவர்களுக்கு 'உள்வீட்டு' உதவி கிடைத்திருக்க வேண்டும் என்பதையே உறுதிப்படுத்துகின்றன என்று ஒருவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் குறித்து இராணுவ நீதிமன்றம் விசாரணை நடத்தி வருவதால் —

புலிகளுக்கு உதவியதாகச் சந்தேகிக்கப்படும் படை வீரரின் பெயரையோ, தரத்தையோ குறிப்பிட முடியாது என அந்தப் பத்திரிகை தெரிவித்தது.

ஆனால் படைத்தளம் வீழ்ச்சியுற்ற போது அங்கு நிலைகொண்டிருந்த சிங்க படையணியின் ஆறாவது றெஜிமெண்டையே, விஜபாகாலாட் படையணியின் ஒன்பதாவது பட்டாலியனையோ அவர் சேர்ந்தவரல்லர் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டது.

முல்லைத்தீவுத் தளம் வீழ்ச்சியுற்ற சமயம் அங்கிருந்துபின்னர் தப்பிப்பிழைத்து பாதுகாப்பாக வேறு முகாம்களுக்கு வந்து சேர்ந்த சுமார் எழுபது படையினரின் வாக்கு மூலங்களை இராணுவ நீதிமன்றம் பதிவு செய்துள்ளது.

கடந்த மூன்று மாதகாலமாக விசாரணைகள் தொடர்கின்றன.

விசாரணை மன்றத்தின் இறுதி அறிக்கை இந்த மாதம் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் இராணுவத் தளபதியிடம் கையளிப்பதற்குத் தயாராகி விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முல்லைத்தீவுத் தளம்வீழ்ச்சியுறுவதற்கு புலிகளுக்கு உள்வீட்டு உதவி கிட்டியதா என்பது பற்றிய முடிவை இந்த அறிக்கை தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டது.

படைத்தள வீழ்ச்சி, அதனால் ஏற்பட்ட இழப்புகள், மீட்பு அணிதளத்தை அடைய தாமதம் ஏற்பட்டது ஏன்? — ஆகிய விடயங்கள் குறித்தே இந்த மன்றம் விசாரணை நடத்தி வருகின்றது.

## புலிகளுடன்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பேச்சுவார்த்தை நடத்துவது தான் அமைதிக்கான ஒரே வழி என்று அர்த்தமில்லை.

அரசின் யோசனைகளை தமிழினத்தவர்கள் முழுமையாக ஏற்க வேண்டும் என்பது தான் மிகமுக்கியம்.

நாட்டின் அறுபது சதவீத மக்கள் அரசின் நிலைக்கு ஆதரவாக இருப்பது அரசின் ஆய்விலிருந்து தெரியவந்திருக்கின்றது.

### பேச்சுக்கு புலிகள் முன்வரவேண்டும்

பொதுமக்களின் துன்ப துயரங்களை முடிவுக்கு கொண்டு வருவதற்கு —

புலிகள் தமது தாக்குதல் போக்கை கைவிட்டு பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும்.

அவர்களுடன் பேச்சு நடத்த எமது அரசு தயாராகவிருக்கின்றது.

ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு காலவரையறையுடன் கூடிய பேச்சுவார்த்தைகளுக்கு அவர்கள் முன் வந்தால் மேற்கொண்டு பேச்சு நடத்த முடியும்.

இந்த நிபந்தனைகளுக்கு இணங்கத் தயார் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவிக்குமானால் எந்த வேளையிலும் பேச்சுக்களில் கலந்து கொள்ள அரசாங்கம் ஆயத்தமாக இருக்கிறது.

### பேச்சுக்கு உதவ பலர் தயார்

நடுநிலை நின்று சமரசப் பேச்சுக்களுக்கு உதவ வெளிநாட்டு அரசாங்கங்கள், வெளிநாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்தும் தனிப்பட்ட பிரமுகர்களிடமிருந்தும் பல முன் மொழிவுகள் கிடைத்துள்ளன.

எனினும் எவ்வித பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன்னரும் அரசின் நிபந்தனைகளுக்கு புலிகள் இணங்குவது அவசியம்.

விடுதலைப் புலிகளின் கடந்த கால செயற்பாடுகளை கருத்தில் கொள்ளும் போது இவ்வாறான நிபந்தனைகளை விதிக்காமல் இருக்கமுடியாது.

முன்னைய காலங்களில் யுத்த நிறுத்த ஒப்பந்தங்களை புலிகள் உதாசீனம் செய்துள்ளனர். அவர்கள் யுத்த நிறுத்தத்தினால் கிடைக்கும் அவகாசத்தைப் பயன்படுத்தி, ஆயுத பலத்தை வளர்த்துக் கொண்டு, மீண்டும் போரில் இறங்கினர்.

இதன் காரணமாகவே அரசாங்கம் பேச்சுவார்த்தைகளுக்கான நிபந்தனை விடயத்தில் கண்டிப்பாக இருக்கிறது.

### படையினருக்கு கட்டுப்பாடு அவசியம்

பொது மக்களுடனான உறவுகளில் பாதுகாப்புப் படையினர் மிகுந்த ஒழுக்கக் கட்டுப்பாட்டை பேண வேண்டியது அவசியம்.

பாதுகாப்புப் படையினரின் நற்பெயர் பாதுகாக்கப்பட வேண்டுமானால் இத்தகைய ஒழுக்கக் கட்டுப்பாடு அவசியம் என்பதை படைகளின் உயர் அதிகாரிகள் மட்டுமன்றி சாதாரண போர் வீரர்களும் அறிந்திருக்க வேண்டும்.

வடக்கில் நடை பெறும் போரினால் பல்லாயிரக்கணக்கான அப்பாவி பொது மக்கள் எத்தனையோ இன்னல்களை அனுபவிக்கிறார்கள்.

இதனை அரசாங்கம் நன்கு புரிந்து கொள்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தைக் கைவிட்டு மீண்டும் ஆயுதப் போராட்டத்தில் இறங்கியிருக்காவிட்டால் இந்த துன்பங்களை நிச்சயமாகத் தவிர்த்திருக்கலாம், என்றார் ஜனாதிபதி. (உ-3)

## சூ கியை தாக்க முயற்சி

மியான்மரில் (பர்மாவில்) ஜனநாயக ஆதரவுத் தலைவர் திருமதி ஆங் சான் சூ கியும் அவரது ஆதரவாளர்களும் சென்று கொண்டிருந்த வாகன அணியை நேற்று முன்தினம் சிலர் தாக்கிய போதும் அவர் தப்பினார்.

அவரின் ஜனநாயக தேசிய லீக்கின் தலைவர் ஒருவர் காயமுற்றார்.

ரங்கூனில் தமது இல்லத்துக்கு வெளியே வாரந்தோறும் ஆங்சான் சூ கி மக்களிடையே உரையாற்றுவதைத் தடுக்க ஆளும் இராணுவ ஆட்சி இத்தாக்குதலுக்கு முயற்சி செய்திருப்பதாகக் கருதப்படுகிறது. (உ-3)

## பெனாஸிரின் செயலாளர் பதவி நீக்கம்

இஸ்லாமாபாத், நவ. 11

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர்பூட்டோவின் அரசியல் விவகாரச் செயலாளரை காபந்து அரசாங்கம் நேற்றுப் பதவி நீக்கம் செய்தது.

## கிளின்டனுக்கு பூட்ரஸ் காலி வாழ்த்து

நியூயோர்க், நவ. 11

அமெரிக்க ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள பில் கிளின்டனுக்கு ஐ. நா. செயலர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அதேசமயம் பூட்ரஸ் பூட்ரஸ் காலி ஐ. நா. பொதுச் செயலர் பதவியில் இருந்து விலகவேண்டும் என்பதில் அமெரிக்கா உறுதியாக இருக்கிறது.

பிறநாடுகள் அனைத்தும் பதவியைத் தொடர பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு ஆதரவு அளித்த பின்பும் அவரைப் பதவி விலக வைப்பதில் அமெரிக்கா விடாப்பிடியாக இருந்து வருகிறது. (இ-10)

## பாரிஸ்-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளதாவது:-

இக்கொலைகள் இனவாத சிங்கள அரசின் அரச பயங்கரவாதத்தினையும், தமிழ் விடுதலை இயக்கத்துக்கு பெருகி வரும் சர்வதேச ஆதரவை சிதைக்க அது முனைந்து நிற்பதையுமே காட்டுகின்றன.

உலக நாடுகளை விடுதலை இயக்கத்துக்கு எதிராக திருப்புவதில் தோல்வி கண்டுவிட்ட சிங்கள அரசு இத்தகைய கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளது.

உலகத் தமிழ்ச்சமுதாயமே! இந்த சவாலை உறுதியோடு எதிர் கொள்வதோடு விடுதலைப் போராட்டத்துக்கு தொடர்ந்து ஆதரவு நல்க வேண்டும்.— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## வாராந்தம்-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிறு தவிர்ந்த ஏனைய ஆறு நாள்களிலும் மொத்தம் ஐந்நூற்று ஐம்பதுக்கும் குறையாத எண்ணிக்கையினர் கொழும்பு போய் வரக் கூடியதாக இருக்கும்.

அது தவிர வாரம் தோறும் 350 பயணிகளுடன் ஓர் கடற்படைக் கப்பலை திருமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்தவும் முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். குடாநாட்டிலுள்ள ஒவ்வொரு இராணுவ பிரிக்கேட்டுக்கும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை பயணிகளை அனுப்பி வைக்கும் வசதி வழங்கப்படும். முன்னுரிமை அடிப்படையில் பயணிகளின் பட்டியலை ஒவ்வொரு பிரிக்கேட்டும் அனுப்பி வைக்கும்.

— இவ்வாறு அந்த உயர் வட்டாரங்கள் மேலும் தகவல் வெளியிட்டன. [உ]



## நியூஸிலாந்து அணியை பாகிஸ்தான் வென்றது

சார்ஜாவில் நடைபெறும் மூன்று நாடுகள் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் நேற்று நடந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களால் நியூஸிலாந்து அணியை வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றது. அடுத்து ஆடிய பாகிஸ்தான் அணி 44 ஓவர்களில் 6 விக்கட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இன்று 2 ஆம் சுற்று ஆட்டத்தில் ஸ்ரீலங்கா அணியை எதிர்த்து நியூஸிலாந்து அணி மோதும். (உ-3)

## பத்து வருட யுத்தங்களில் 10 லட்சம் குழந்தைகள் பலி

### 30 லட்சம் சிறார்கள் ஊனமுற்றனர்

கடந்த பத்து ஆண்டுகள் உலகம் முழுவதும் நடந்த யுத்தங்கள் மற்றும் ஆயுதப் போர்கள் காரணமாக பத்து லட்சம் குழந்தைகள் இறந்துள்ளன; 30 லட்சம் குழந்தைகள் ஊனமாக்கப்பட்டுள்ளன.

ஐ. நா. வின் அறிக்கை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

ஈராக் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடை காரணமாக மாதம் தோறும் 4 ஆயிரத்து 500 குழந்தைகள் மரணிக்கின்றன என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

(உ-3)

## கண்டியில் இயங்கிய 'மினி கச்சேரி!'

திருகோணமலை, நவ. 11

கண்டியில் சட்ட விரோதமாக இயங்கிவந்த மினிக் கச்சேரி ஒன்றை கம்பஹா பொலீஸார் அண்மையில் முற்றுகையிட்டு மூன்று பேரைக் கைது செய்தனர். அத்துடன் அந்த 'கச்சேரியில்' இருந்து மோசடி செய்யப்பட்ட ஆவணங்கள், றப்பர் ஸ்டாம்புகள், மோசடி செய்யப்படுவதற்குப் பயன் படுத்தப்படும் உபகரணங்கள் ஆகியவற்றையும் பொலீஸார் கைப்பற்றினர். பிறப்பு அத்தாட்சி பத்திரங்கள், கடவுச் சீட்டுக்கள், திருமணச் சான்றிதழ்கள், ஜி.சி.ஈ சாதாரண, உயர்தரச் சான்றிதழ்கள், தற்காலிக சாரதி லைஸன்ஸ்கள், வைத்தியச் சான்றிதழ்கள் ஆகியன மோசடி செய்யப்பட்டு இக் 'கச்சேரியினால் வழங்கப்பட்டு வந்தன எனத் தெரிவிக்கப் படுகிறது.

அமைச்சர்கள் மற்றும் முப்படைகளின் தளபதிகளின் பெயர்களைக் கொண்ட போலி றப்பர் 'ஸீல்'களும் கைப்பற்றப்பட்டுள்ளன

மூன்று சந்தேக நபர்களும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இன்னும் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட வேண்டியிருப்பதாக பொலீஸார் தெரிவித்தனர். (உ-150)

## துணை வைத்திய ஊழியர் சட்டப்படி மட்டுமே வேலை

கொழும்பு, நவ. 11

வைத்தியசாலைகளில் பணி புரியும் துணை வைத்திய சேவையைச் சேர்ந்தவர்கள் கடந்த திங்கட் கிழமை சட்டப்படி வேலை செய்யும் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

எக்ஸ்றே தொழில்நுட்பவியலாளர், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள், மருந்தாளர், உடற்கூற்று சிகிச்சையாளர்கள் ஆகியோரே இந்தப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

ஜி சீ. ஈ (உயர்தர) பரீட்சைக்கு குறைவான பரீட்சையில் சித்தியடைந்தோரை இப் பதவிகளுக்கு நியமிக்கக் கூடாது என்றும் —

அத்தகையோர்க்கு மூன்று வருடப் பயிற்சியின் பின்பே நியமனம் வழங்க வேண்டும் என்றும்—

தற்போது தங்களுக்குள்ள சம்பள முரண்பாடு நீக்கப்பட வேண்டும் என்றும்—

தங்களின் தற்போதைய தராதரங்களை கவனத்தில் கொண்டு தங்களுக்கு விசேட பதவி உயர்வுகளை வழங்க வேண்டும் என்றும்—

நான்கு கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் போராட்டத்தில் குதித்திருக்கின்றார்கள். (உ-3-150)

## இலங்கைத் தமிழர்கள் மூவர் டில்லியில் கைதாகினர்

கொழும்பு, நவ. 11

புதுடில்லியில் சட்ட பூர்வமான ஆவணங்கள் இன்றித் தங்கியிருந்த மூன்று இலங்கைத் தமிழர்கள் டில்லிப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு ஸ்ட்ராபெரி வீதியைச் சேர்ந்த கருணேசன் (வயது 45), சுன்னாகத்தைச் சேர்ந்த ராதா (வயது 40), பண்டத்தரிப்பைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கிருஷ்ணகுமார் (வயது 24) ஆகியோரே புதுடில்லி, பாகர்கனி பகுதி வாடி வீடு ஒன்றிலிருந்து அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

1981 இல் சென்னைக்கு வந்து சேர்ந்த இவர்கள் அடிக்கடி புதுடில்லி சென்று வந்ததாகக் கூறப்படுகின்றது.

இவர்களுக்கு எதிராக புதுடில்லிப் பொலீஸார் வழக்கு ஒன்றைப் பதிவு செய்துள்ளனர். (உ-150)

மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 11-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org